## தந்தை பெரியார் 148வது பிறந்த நாள்!

# கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் நாளை காலை 8.30 மணிக்கு அண்ணா சாலை, சிம்சன் அருகே அமைந்துள்ள தந்தை பெரியார் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கிறார்!

### சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை!



பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் 148வது பிறந்த நாளை முன்னிட்டு நாளை (17.9.2026) காலை 8.30 மணிக்கு அண்ணா சாலை, சிம்சன் அருகே உள்ள தந்தை பெரியார் சிலைக்கு கழகத் தலைவர் தளபதி **மு.க.ஸ்டாலின்,** பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் **டி.ஆர்.பாலு மற்றும் முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர்கள்** உள்ளிட்ட கழக முன்னணியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்கள்.

கழக மாநில அமைச்சர் பெருமக்கள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை,இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி ஆகிய அனைத்து அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**நே.சிற்றரசு**
செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

---

### ஓய்வு பெற்ற நீதியரசர் குரியன் ஜோசப் தலைமையிலான – ஒன்றிய – மாநில அரசுகளுக்கு இடையிலான உறவுகள் குறித்து ஆராய அமைக்கப்பட்ட

# உயர்நிலைக் குழுவை முடக்கும் வேலைகளில் ஆளுங்கட்சி இறங்கி இருப்பது கண்டிக்கத்தக்கது!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, செப்.16**

**ஓய்வு பெற்ற நீதியரசர் குரியன் ஜோசப் தலைமையிலான - ஒன்றிய - மாநில அரசுகளுக்கு இடையிலான உறவுகள் குறித்து ஆராய அமைக்கப் பட்ட உயர்நிலைக் குழுவை முடக்கும் வேலைகளில் ஆளுங் கட்சி இறங்கி இருப்பது கண்டிக்கத்தக்கது ! என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் விடுத்துள்ள வலை தளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

**அவரது வலைதளப் பதிவு வருமாறு:-**

ஓய்வுபெற்ற நீதியரசர் குரியன் ஜோசப் தலைமையில் ஒன்றிய - மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகள் குறித்து ஆராய்வதற்காக நம் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசால் அமைக்கப் பட்ட உயர்நிலைக்குழுவை முடக்கும் வேலைகளில் ஆளுங்கட்சி இறங்கி இருப்பது கண்டிக்கத்தக்கது.

பணியாளர்கள் பற்றாக்குறையால் இந்தக்குழு தொடர்ந்து செயல்படுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.



இதனால், மாநில சுயாட்சி குறித்த குழுவின் 2-ஆவது ஆய்வு அறிக்கையை தயார் செய்து வந்த ஆய்வாளர்களும் - ஆராய்ச்சி மாணவர்களும் தொடர்ந்து செயல்பட முடியாத சூழலை இந்த Dummy அரசு உருவாக்கி இருக்கிறது.

மாநில உரிமைகள் குறித்து பேசுவதற்கும், போராடுவதற்கும் பயப்படும் த.வெ.க அரசு, அது குறித்து ஆய்வு செய்யவே பயந்து நடுங்கி ஆணையத்தை முடக்குவது வெட்கக்கேடானது.

Reels போட்டால் மட்டும் மாநில சுயாட்சியை நிலைநாட்ட முடியாது என்பதை உணர்ந்து, ஒன்றிய - மாநில அரசுகளின் உறவு பற்றி ஆய்வு செய்யும் உயர்நிலைக்குழு, தொய்வின்றி செயல்படுவதை இந்த அரசு உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு அப்பதிவில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

## ‘டம்மி’ முதல்வர் விஜய்யின் துறையிலேயே ஊழலோ ஊழல்!

# ஜூலையில் திறந்த சிலைக்கு ஆகஸ்ட்டில் டெண்டர்!

## லஞ்ச ஒழிப்புத் துறையினரிடம் புகார்!

**சென்னை, செப். 16 –**

**த.வெ.க ஆட்சியில் ஜூலையில் திறந்த சிலைக்கு ஆகஸ்டில் டெண்டர் விடப்பட்டுள்ளதாக அறப்போர் இயக்கம் குற்றம்சாட்டி உள்ளது. இது தொடர்பாக அறப்போர் இயக்கம் வெளியிட்டுள்ள சமூக வலைதள வீடியோவில், “தாம்பரம் மாநகராட்சியில் டெண்டர் சட்ட விதியை அப்பட்டமாக மீறி, டெண்டர் கோரப்படும் முன்பே கூட்டுசதி செய்து பணிகளை முடித்து திறப்பு விழா செய்துள்ள மிகப்பெரிய முறைகேட்டை அறப்போர் இயக்கம் தகுந்த ஆதாரங்களுடன் வெளிச்சத்திற்கு கொண்டு வருகிறது.**

**ஜூலை மாதம் அமைச்சர் சரத்குமார் பெருங்களத்தூர் ரவுண்டானாவில் அசோகா பில்லர் சிலையை திறந்து வைத்தார். ஜூலை 29ஆம் தேதி இது தொடர்பாக அமைச்சர் சரத்குமார் அவரது சமூக வலைதளத்தில் பதிவு வெளியிட்டு உள்ளார். ஆனால், இந்த அசோகா பில்லருக்கான டெண்டரே ஆகஸ்ட் 6ஆம் தேதி தான் போடப்பட்டு உள்ளது.**

**எல்லா வேலையும் முடிக்கப்பட்ட பின்னர் ஆகஸ்ட் 6ஆம் தேதி தான் இதற்கான டெண்டர் கோரப்பட்டு ஆகஸ்ட் 26ஆம் தேதி தான் டெண்டர் முடிக்கப்படுவது போல காட்டப்பட்டு உள்ளது. இந்த டெண்டருக்கான வேலைகளை 2 மாதத்தில் முடிக்க வேண்டும் என்று டெண்டர் இன்வைட்டிங் அத்தாரிட்டி தாம்பரம் ஆணையர் பாலச்சந்தர் ஐ.ஏ.எஸ் குறிப்பிட்டு உள்ளார்.**

**இதுமட்டும் அல்ல சிட்லபாக்கம் ரவுண்டா பக்கத்தில் ஆகஸ்ட் 10ஆம் தேதி ஒரு சிலை திறந்து வைத்திருக்கிறார்கள். இந்த சிலைக்கு டெண்டர் கோருவது ஆகஸ்ட் 6ஆம் தேதி, ஆகஸ்ட் 24ஆம் தேதி வரைக்கும் ஒப்பந்ததாரர்கள் போட்டி போடலாம். ஆகஸ்ட் 24ஆம் தேதிக்கு பின் ஒருவருக்கு டெண்டர் கொடுக்கப் படும். இதில், முன்னாடியே கூட்டு சதி செய்து ஒப்பந்ததாரரை முடிவு செய்துவிட்டனர்.**

**கிட்டத்தட்ட 45 லட்சம் ரூபாய்க்கான டெண்டர்களை முதலிலேயே முடிவு செய்து ஒப்பந்த தாரர்களுடன் சேர்ந்து கூட்டு சதி செய்துள்ளார். இப்போது கணக்கு காட்டுவதற்காக டெண்டர்கள் போடப்பட்டு உள்ளது.**

**ஊழலற்ற நிர்வாகத்தை வழங்குவோம் என உறுதியளித்து வந்த புதிய த.வெ.க அரசின் கீழ், இதுபோன்ற டெண்டர் முறைகேடுகள் செய்வது அதிர்ச்சியளிக்கிறது.**

**இது குறித்த புகாரை அறப்போர் இயக்கம் முதல்வர், லஞ்ச ஒழிப்பு துறை உள்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி உள்ளது.**

---

### தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஊழியர் நலச்சங்கங்களின் பேரமைப்பு சார்பில்

# வைக்கத்தில் தந்தை பெரியார் சிலைக்கு மாலை!

## பேரமைப்பு நிர்வாகிகள் பங்கேற்பு !

*வைக்கம், செப்.16-*

செப்டம்பர் 17 தந்தை பெரியார் 148ஆவது பிறந்த நாள் வைக்கம் தந்தை பெரியார் நினைவிடத்தில் வைக்கம் போராட்ட நினைவு கூரல் மற்றும் தந்தை பெரியார் சிலைக்கு மரியாதை செய்யப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் வைக்கம் சட்ட மன்ற உறுப்பினர் கே.பினுமோன் (காங்கிரஸ்) பங்கேற்று சிறப்பிக்கிறார்.

2026 செப்டம்பர் 17 தந்தை பெரியார் 148ஆவது பிறந்த நாளன்று, தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஊழியர் நலச்சங்களின் பேரமைப்பின் சார்பில் (*National Confederation of OBC Employees Welfare Associations*), கேரளாவில் வைக்கம் வீதிகளில் ஒடுக்கப்பட்டவர்கள் நடப்பதற்கான தடையை எதிர்த்து, அந்த தடையை உடைக்க 1924ல் பெரியார் நடத்திய வீரம் செறிந்த வைக்கம் போராட்டத்தை நினைவு கூறும் விதமாக வைக்கம் வீதிகளில் ஊர்வலமாக நடந்து சென்று, வைக்கத்தில் அமைந்துள்ள தந்தை பெரியார் நினைவிடத்தில் ஒன்று கூடி, தந்தை பெரியார் சிலைக்கு மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது. இந்த நிகழ்வில் வைக்கம் சட்ட மன்ற உறுப்பினர் கே.பினுமோன் (காங்கிரஸ்) அவர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார்.

பேரமைப்பின் பொதுச்செயலாளர் கு.தனசேகர், தலைவர் சி.சேதுபதி, துணைத் தலைவர் தி.செ. அன்பரசு, செயல் தலைவர் ஆர். செந்தாமரைக்கண்ணன், பொருளாளர் செல்வம் பெர்னாண்டோ முன்னெடுப்பில், தமிழ்நாட்டில் இருந்து ஒன்றிய அரசு மற்றும் பொதுத்துறைகளில் செயல்படும் இதர பிற்படுத்தப்பட்ட ஊழியர் நலச் சங்கங்களின் நிர்வாகி கள் பங்கேற்க உள்ளனர்.



மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டம் 19–வது வட்டத்தில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் முன்னிலையில் நடைபெற்றது. கழகத் தலைவரை செய்கையிலும், வார்த்தையிலும் சட்டமன்றத்தில் ஆணவமாக பேசிய நடிகர் விஜய் உள்ளிட்ட அமைச்சர்களுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பகுதி அவைத் தலைவர் வி. திராவிடவீரன் தலைமையில்,வட்ட செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் வரவேற்பில், கே. கருணாகரன்,பி. எஸ். சந்துரு, வி. ஆர். குப்பன், மஞ்சம்பாக்கம் பாபு ஆர்.முரளி,, ஆ. ராஜேந்திரன், கே.காசி நாதன், வி. கார்த்திகேயன், பா. சந்திரன், பி. நிர்மல் குமார், கே.ராஜா, எஸ். உதயகுமார்,பி. ஜெயராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

---

### மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம்!

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினின் தியாகங்களை சட்டமன்றத்தில் கொச்சைப்படுத்தும் நடிகர் விஜய் - அமைச்சர்களுக்குக் கண்டனம்!

## பகுதிச் செயலாளர் புழல் எம். நாராயணன் முன்னிலையில் நிர்வாகிகள் கூட்டம்!

*மாதவரம், செப். 16-*

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக செயல் வீரர்கள் கூட்டத்தில் கழகத் தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்களின் தியாகங்களை கொச்சைப்படுத்தும் விதமாக சட்டமன்றத்தில் ஆணவமாக பேசியும் செய்கை செய்த நடிகர் விஜய் மற்றும் அமைச்சர்களை கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி திமுக செயல்வீரர்கள் கூட்டம் 19-வது வட்டம் மாத்தூர் இரண்டாவது பிரதான சாலையில் அமைந்துள்ள சுவாதி திருமண மண்டபத்தில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் நடைபெற்றது.

மாதவரம் வடக்கு பகுதி அவைத்தலைவர் வி. திராவிட வீரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு 19-வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் வரவேற்புரை ஆற்றினார்.

வட்டச் செயலாளர்கள் 17 வது வட்டம் கே. கருணாகரன், 23வது வட்டம் பி.எஸ். சந்துரு,23 அ வட்டம் வி.ஆர். குப்பன், மாதவரம் வடக்கு பகுதி நிர்வாகிகள் ஆ.ராஜேந்திரன், ஆர். முரளி, கே. காசிநாதன், பி. நிர்மல் குமார், வி. கார்த்திகேயன், பா. சந்திரன், ஜிம் கே. ராஜா, வர்த்தகர் அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். உதயகுமார்,வர்த்தக அணி துணை அமைப்பாளர் பி. ஜெயராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். அப்பொழுது பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

1) தலைமைக் கழகத்தின் அறிவுறுத்தலின்படி மாதவரம் வடக்கு பகுதி மற்றும் மாதவரம் வடக்கு பகுதியில் அடங்கிய பகுதி, வட்டங்களின் மறுவ வரையறை செய்யப்பட்டு நிர்வாகிகளின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டுள்ளது .அதை நிறைவேற்றி தர தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2) சமீபத்தில் நடைபெற்ற சட்டமன்றத்தில் கழக தலைவர் மு. க . ஸ்டாலின் அவர்களின் மிசா தியாகங்களை கொச்சைப்படுத்தும் விதமாகவும், காவலர்களால் அவர் தாக்கப்பட்டு உடைக்கப்பட்ட தாடையை கிண்டல் செய்யும் விதமாகவும் செய்கை காண்பித்த தகுதியற்ற முதலமைச்சர் நடிகர் விஜய் அவர்களை இந்த கூட்டம் வன்மையாக கண்டித்து தீர்மானம் நிறைவேற்றுகிறது.

3) நிர்மல் குமார் என்கின்ற அமைச்சர் கழகத் தலைவரின் மிசா பற்றிய தியாகங்களை கொச்சைப்படுத்தும் விதமாக தான் தோன்றித்தனமாக பேசி மக்கள் மத்தியில் வெறுப்பினை உண்டாக்கும் வகையில் பேசி வருவதை மாதவரம் வடக்கு பகுதி திமுக வன்மையாக கண்டிப்பதாக தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

4)சமீபத்தில் நடைபெற உள்ள மதுராந்தகம் மற்றும் தாராபுரம் இடைத்தேர்தல்களில் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்கள் திரு இ. பரந்தாமன் மற்றும் வழக்கறிஞர் சுகன்யா ஆகியோருக்கு தேர்தல் பணியாற்றி உதயசூரியன் சின்னத்திற்கு அயராது உழைத்து வெற்றி வாய்ப்பைப் பெற்றுத்தர வேண்டுமென இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றுகிறது.

5) 15 ஆம் தேதி சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெறுகின்ற முப்பெரும் விழாவில் மாதவரம் வடக்கு பகுதி திமுகவினர் திரளாக கலந்து கொண்டு சிறப்பிப்பது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

6)பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று மாதவரம் வடக்கு பகுதிக்கு உட்பட்ட 19வது வட்டம் மாத்தூரில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை 17 வது வட்டம் வடபெரும்பாக்கம், மற்றும் சின்ன தோப்பு, பகுதிகளில் அடங்கியுள்ள பேரறிஞர் அண்ணா சிலை 15வது வட்டம் மணலி புதுநகர் பகுதியில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா சிலை ஆகிய இடங்களில் மாலைகள் அணிவித்து இனிப்பு வழங்கி பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுவது எனவும் மற்ற வட்டங்களிலும் பாகங்களிலும் பேரறிஞர் அண்ணாவின் திரு உருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் மகளிர் அணி நிர்வாகிகள் எஸ் .சுகாசினி, அத்திகுளம் தேவி, கஸ்தூரி, மாணவரணி த. விக்னேஸ்வரன், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜி .ராஜேஷ் கண்ணன், டோமினி பிரான்சிஸ் தேவராஜ், சாந்தகுமார்,வி. சிவ பிரகாஷ், கே. யுவராஜ்,ஆதி திராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர்கள் கே.விஜயகுமார், எஸ். புஷ்பராஜ், வழக்கறிஞர்கள் சடையங்குப்பம் வெங்கடேசன், சுரேந்தர், எம். என். தளபதி, 15வது வட்டம் தசரதன், டில்லி பாபு,

16 வது வட்டம் கே. ஏ. ரமேஷ், என். மகேஷ் குமார், செமின் எடிசன், நாகலிங்கம், மகாலட்சுமி, ருப்குமார்,17 வது வட்டம் எஸ். பாலாஜி, சி. மூர்த்தி, டி. திவாகர், தமிழ்ச்செல்வன், ரஞ்சன், ராகுல், சுரேஷ்,சதீஷ்,

19வது வட்டம் ரகுவரன்,ஹரி சுப்பிரமணியன், சாய் சந்திப், கலைச்செல்வி, சுந்தரி, பிரவீன் குமார், ஜானகிராமன், கணேசன், மதியழகன், கிருஷ்ணன், அண்ணாதுரை, நாகராஜன்,முகமது முஸ்தபா, எஸ். நெடுஞ்செழியன், காசி, விக்ரமன், ரவி, தமிழரசன், லோகன், அரசு, 23 வது வட்ட துணை செயலாளர் வழக்கறிஞர் டி. ராஜா ராம், உதயகுமார், ராஜா, விமல், ஜமால், 23அ வட்ட நிர்வாகிகள் அப்துல் சமது, ஹரி, வி. ஆர். கே. ஜவகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

கூட்டத்தின் இறுதியில் கழகத் தலைவர் அவர்களை அவதூறாக பேசிய முதலமைச்சர் விஜய் மற்றும் அமைச்சர்கள் நிர்மல் குமார் ரமேஷ் ஆகியோரை கண்டித்து கண்டன கோஷங்கள் எழுப்பப்பட்டன.